Puducherry / Regional Bulletin / Tamil /18.10 Hrs. / 30.01.2025 / Script

**வணக்கம்**

**ஆகாஷ்வாணி - புதுச்சேரி**

**மாநிலச் செய்திகள்**

**வாசிப்பவர் : மலர்விழி**

**தேதி : 29.01.2025 - வியாழக்கிழமை** **நேரம் : மாலை 6.10 மணி**

---

***தலைப்புச் செய்திகள்***

**மகாத்மா காந்தி நினைவு நாளான** இன்று, நாடு அன்னாருக்கு புகழஞ்சலி செலுத்துகிறது. இன்றைய தினம், **தியாகிகள் தின**மாகவும் கடைபிடிக்கப் படுகிறது.

நாடாளுமன்றத்தின் பட்ஜெட் கூட்டத்தொடர் நாளை தொடங்குவதை ஒட்டி, மத்திய அரசு இன்று புதுடெல்லியில், **அனைத்துக் கட்சிக் கூட்டம்** ஒன்றை நடத்தியது.

**பிரயாக்ராஜ் மஹா கும்பமேளா**வில் இருந்து பக்தர்கள் ஊர் திரும்ப ஏதுவாக, ரயில்வே துறை, நேற்று இரவு முழுவதும், 364 ரயில்களை இயக்கியது.

**வாகன நெரிசல்** அதிகமுள்ள புதுச்சேரி போன்ற இடங்களில், சாலைப் பாதுகாப்பு குறித்த விழிப்புணர்வு மிக அவசியம் என்று துணைநிலை ஆளுநர் திரு. கைலாஷ்நாதன் கூறியுள்ளார்.

***காந்தி நாடு (10)***

தேசத் தந்தை மகாத்மா காந்தியின் 77ஆம் ஆண்டு நினைவு நாளான இன்று, நாடு அன்னாருக்கு புகழஞ்சலி செலுத்துகிறது. இன்றைய தினம், தியாகிகள் தினமாகவும் நாடு முழுவதும் கடைபிடிக்கப் படுகிறது. புதுடெல்லி, ராஜ்காட்டில் உள்ள காந்தி சமாதியில், இன்று காலை, அனைத்து சமய பிரார்த்தனை நடைபெற்றது. குடியரசுத் தலைவர் திருமதி. திரவுபதி முர்மு, குடியரசு துணைத் தலைவர் திரு. ஜக்தீப் தன்கர், பிரதமர் திரு. நரேந்திர மோடி, எதிர்கட்சித் தலைவர் திரு. ராகுல் காந்தி ஆகியோர், காந்தி சமாதியில் மலர் வளையம் வைத்து அஞ்சலி செலுத்தினர். மத்திய அமைச்சர்கள் திரு. ராஜ்நாத் சிங், திரு. மனோகர் லால் கட்டார், முப்படைகளின் தலைமைத் தளபதி மற்றும் முப்படைத் தலைவர்களும், இந்நிகழ்ச்சியில் கலந்து கொண்டனர்.

*பட்ஜெட் கூட்டம் (16)*

நாடாளுமன்றத்தின் பட்ஜெட் கூட்டத்தொடர் நாளை தொடங்குகிறது. இதை ஒட்டி, மத்திய அரசு இன்று புதுடெல்லியில் நடத்திய அனைத்துக் கட்சிக் கூட்டத்தில், பாதுகாப்பு அமைச்சர் திரு. ராஜ்நாத் சிங், சுகாதார அமைச்சர் திரு. ஜெ.பி. நட்டா, நாடாளுமன்ற விவகாரங்கள் துறை அமைச்சர் திரு. கிரண் ரிஜிஜு, காங்கிரஸ் நாடாளுமன்ற உறுப்பினர் திரு. ஜெய்ராம் ரமேஷ், திரிணாமுல் காங்கிரஸ் எம்.பி. திரு. சுதீப் பந்தோபாத்யாய், திமுக நாடாளுமன்ற உறுப்பினர் திரு. டி.ஆர். பாலு உள்ளிட்டோர் கலந்து கொண்டனர். நாடாளுமன்ற அலுவல்கள் சுமூகமான முறையில் நடைபெறுவதை உறுதிப் படுத்துவதில், மத்திய அரசு, இக்கூட்டத்தின் போது, அனைத்து அரசியல் கட்சிகளின் ஒத்துழைப்பை நாடியது. கூட்டத்திற்குப் பின்னர், திரு. கிரண் ரிஜிஜு செய்தியாளர்களிடம் பேசுகையில், நாளை பட்ஜெட் கூட்டத் தொடரின் தொடக்க நாளில், குடியரசுத் தலைவர் திருமதி. திரவுபதி முர்மு, இரு அவைகளின் கலப்புக் கூட்டத்தில் உரையாற்ற இருப்பதாக தெரிவித்தார். குடியரசுத் தலைவரின் உரையைத் தொடர்ந்து, பொருளாதார ஆய்வறிக்கை தாக்கல் செய்யப்படும் என்றும், வரும் சனிக்கிழமை, மத்திய பட்ஜெட் தாக்கலாகும் என்றும் அவர் கூறினார்.

*ரயில்வே (8)*

நேற்று, மவுனி அமாவாசை தினத்தை ஒட்டி, மஹா கும்பமேளாவிற்கு வந்திருந்த பெரும் எண்ணிக்கையிலான பக்தர்கள், அவரவர் ஊர் திரும்ப ஏதுவாக, ரயில்வே துறை இரவு முழுவதும் தொடர்ச்சியான முறையில், 364 ரயில்களை இயக்கியதாக ரயில்வே அமைச்சர் திரு. அஸ்வினி வைஷ்ணவ் தெரிவித்துள்ளார். இப்பணிகளில், சம்மந்தப்பட்ட ரயில்வே அதிகாரிகள் அனைவரும், மாநில அரசுடன் ஒருங்கிணைந்து செயல்பட்டதாக, அவர் இன்று புதுடெல்லியில் செய்தியாளர்களிடம் பேசுகையில் கூறினார். இந்த ரயில்கள் மூலம் சுமார் 12 இலட்சம் பக்தர்கள் அவரவர் இடங்களுக்கு திரும்பி இருப்பதாக அவர் தெரிவித்தார்.

*செயற்கை நுண்ணறிவு (15)*

செயற்கை நுண்ணறிவுத் தொழில்நுட்பத்தை மேம்படுத்துவதற்கான, அடிப்படை தரவுக் கட்டமைப்பு வசதிகளை, வரவிருக்கும் மாதங்களில், இந்தியா சொந்தமாகவே உருவாக்கும் என்று, மத்திய தகவல் – தொழில்நுட்பத் துறை அமைச்சர் திரு. அஸ்வினி வைஷ்ணவ் கூறியுள்ளார். இந்த, இயந்திரக் கற்றல் வசதிகள், உலக அளவில் போட்டியிடத் தக்கதாக அமையும் என்று, அவர் இன்று புதுடெல்லியில் செய்தியாளர்களிடம் பேசுகையில் கூறினார். செயற்கை நுண்ணறிவை பாதுகாப்பான முறையில் பயன்படுத்துவது குறித்து ஆராய, தனிக் கழகம் அமைக்கப் படும் என்றும், அவர் தெரிவித்தார். DeepSeek தொழில்நுட்பத்தினால், தனிநபர்களின் அந்தரங்க உரிமை பாதிக்கப் படும் என, கவலை ஏற்பட்டுள்ளது குறித்து, செய்தியாளர்கள் கருத்துக் கேட்ட போது, இத்தகைய பாதிப்புகளை தவிர்க்கும் வகையில், இந்திய சர்வர்கள் மூலமாகவே, இத்தொழில் நுட்பம், பயன்பாட்டிற்கு வழங்கப் படும் என அமைச்சர் பதில் அளித்தார். நவீன தொழில்நுட்பங்கள் அனைவருக்கும் கிடைக்க வேண்டும் என்பதே பிரதமர் திரு. நரேந்திர மோடியின் எண்ணம் என்றும் அவர் கூறினார்.

*மகாத்மா காந்தி (15)*

தேசத் தந்தை மகாத்மா காந்தியின் நினைவு நாள், இன்று, புதுச்சேரியில் அரசு சார்பில் அனுசரிக்கப் பட்டது. கடற்கரைச் சாலையில் உள்ள மகாத்மா காந்தியின் திருவுருவச் சிலைக்கு, துணைநிலை ஆளுநர் திரு. கைலாஷ்நாதன், முதலமைச்சர் திரு. ரங்கசாமி, சட்டப் பேரவைத் தலைவர் திரு. ஆர்.செல்வம், அமைச்சர்கள் திரு. நமச்சிவாயம், திரு. சாய் சரவணன் குமார், சட்டமன்ற உறுப்பினர்கள் மற்றும் மூத்த அதிகாரிகள் மாலை அணிவித்து மரியாதை செலுத்தினர். நிகழ்ச்சியின் போது, பாரதியார் பல்கலைக் கூட ஆசிரியர்கள் தேசபக்தி பாடல்களை இசைத்தனர். தொடர்ந்து 2 நிமிடம் மவுன அஞ்சலி செலுத்தப் பட்டது.

காரைக்கால் மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில், வருவாய் பிரிவு துணை ஆட்சியர் திரு. இராதாகிருஷ்ணன் தலைமையில், அதிகாரிகள் மற்றும் ஊழியர்கள், 2 நிமிடம் மவுன அஞ்சலி செலுத்தினர்.

ஏனாமில், ஃபெர்ரி சாலை, தாவரவியல் பூங்கா மற்றும் நகராட்சி பூங்காவில் உள்ள காந்தி சிலைகளுக்கு, மண்டல நிர்வாக அதிகாரி திரு. ஆர்.முனிசாமி மற்றும் இதர அதிகாரிகள் மலரஞ்சலி செலுத்தினர்.

*போக்குவரத்து மாதம் -1(17)*

புதுச்சேரியில், இன்று கம்பன் கலையரங்கில் நடைபெற்ற, சாலைப் பாதுகாப்பு மாதத்தின் நிறைவு விழாவில், துணைநிலை ஆளுநர் திரு. கைலாஷ்நாதன் சிறப்பு விருந்தினராக கலந்து கொண்டு, சாலைப் பாதுகாப்பு குறித்த பல்வேறு போட்டிகளில் வெற்றி பெற்ற மாணவர்களுக்கு பரிசுகளை வழங்கினார். போக்குவரத்து விதிமுறைகளை சிறப்பாக அமல்படுத்திய காவலர்கள் மற்றும் விழிப்புணர்வு பணியில் ஈடுபட்ட NSS அதிகாரிகள் மற்றும் மாணவர்களுக்கு விருதுகளையும் அவர் வழங்கினார். சாலைப் பாதுகாப்பு குறித்த பாடத்திட்டத்தின் கீழ் தயாரிக்கப்பட்டுள்ள விழிப்புணர்வு வீடியோக்களை கல்வித்துறையிடம் அவர் ஒப்படைத்தார். விழாவில் துணைநிலை ஆளுநர் பேசுகையில், வாகன நெரிசல் அதிகமுள்ள புதுச்சேரி போன்ற இடங்களில், சாலைப் பாதுகாப்பு குறித்த விழிப்புணர்வு அவசியம் என்றார். புதுச்சேரியில் ஆண்டுதோறும் சுமார் 200 பேர் சாலை விபத்துக்களில் உயிரிழப்பதாக அவர் தெரிவித்தார். விபத்து மரணங்களின் எண்ணிக்கை அதிகமுள்ள மாநிலங்களில் ஒன்றாக புதுச்சேரி இருப்பதால், சாலைப் பாதுகாப்பு விதிமுறைகளை முழுமையாக பின்பற்றும் வகையில், மக்களின் பழக்கத்தை மாற்றுதல் அவசியம் என அவர் வலியுறுத்தினார். துணைநிலை ஆளுநர் மேலும் கூறுகையில்...

**(வாய்ஸ்)**

*போக்குவரத்து மாதம் -2(9)*

சாலைப் பாதுகாப்பு மாதத்தின் நிறைவு விழாவில், முதலமைச்சர் திரு. ரங்கசாமி பேசுகையில், புதுச்சேரியில் சாலைகளை அகலப்படுத்த முடியாத சூழல் இருப்பதால், இருக்கின்ற சாலைகளை பழுதின்றி பராமரிப்பதன் மூலம், விபத்துக்களை குறைக்க அரசு முயன்று வருவதாக தெரிவித்தார். சாலை விபத்துக்களை தடுப்பது குறித்து, உச்சநீதிமன்றத்தால் அமைக்கப்பட்ட குழுவினர் வழங்கும் ஆலோசனைகளை அரசு செயல்படுத்தி வருவதாகவும், பொதுமக்கள் மட்டுமின்றி, மாணவர்களுக்கும் சாலை பாதுகாப்பு குறித்து விழிப்புணர்வு

ஏற்படுத்தப் படுவதாகவும் அவர் தெரிவித்தார். முதலமைச்சர் மேலும் கூறுகையில்...

**(வாய்ஸ்)**

***போக்குவரத்து மாதம் -3(6)***

சட்டப் பேரவைத் தலைவர் திரு. ஆர்.செல்வம், மாநில உள்துறை அமைச்சர் திரு. நமச்சிவாயம், சட்டமன்ற உறுப்பினர் திரு. அனிபால் கென்னடி, தலைமைச் செயலர் திரு. சரத் சௌகான், அரசுச் செயலர்கள் திரு. மாதவ் ராவ் மோரே, திரு. ஜவஹர், டாக்டர் முத்தம்மா, போக்குவரத்து ஆணையர் திரு. சிவக்குமார், பள்ளிக் கல்வித் துறை இயக்குநர் திருமதி. பிரியதர்ஷினி உட்பட பலர், சாலைப் பாதுகாப்பு மாத நிறைவு விழாவில் கலந்து கொண்டனர்.

***காசநோய் (8)***

காசநோய் இல்லாத இந்தியாவை உருவாக்க, தேசிய அளவில் கடந்த ஆண்டு டிசம்பர் 7ஆம் தேதி தொடங்கிய 100 நாள் இயக்கம், இன்று 54ஆவது நாளை எட்டியுள்ள நிலையில், புதுச்சேரியில் இதுவரை, 7 ஆயிரம் பேருக்கு சளி பரிசோதனையும், அறிகுறி இல்லாதவர்கள் உட்பட சுமார் 10 ஆயிரத்துக்கும் மேற்பட்டவர்களுக்கு எக்ஸ்ரே பரிசோதனையும் மேற்கொள்ளப் பட்டதில், 50 பேருக்கு காசநோய் இருப்பதாக கண்டறியப் பட்டு, சிகிச்சை தொடக்கப் பட்டுள்ளதாக, மாநில காசநோய் கட்டுப்பாட்டு அதிகாரி டாக்டர் வெங்கடேஷ் தெரிவித்துள்ளார். இன்று இது குறித்து எமது செய்தியாளரிடம் பேசிய அவர்...

**(வாய்ஸ்)**

***டிஜிட்டல் பரிவர்த்தனை (8)***

நாட்டில் டிஜிட்டல் முறையிலான பணப் பரிவர்த்தனைகளின் மொத்த எண்ணிக்கை, கடந்த செப்டம்பர் மாதத்தில், முந்தைய ஆண்டின் இதே காலகட்டத்துடன் ஒப்பிடுகையில், 11.1 சதவிகித அளவில், இரட்டை இலக்க வளர்ச்சி கண்டுள்ளது. செப்டம்பர் மாதத்தில், ரிசர்வ் வங்கியின் டிஜிட்டல் பணப் பட்டுவாடாக் குறியீடும், 465.33 ஆக அதிகரித்துள்ளது. இது கடந்த ஆண்டு மார்ச் மாதத்தில், 445.5ஆக இருந்தது. நாட்டில், டிஜிட்டல் பணப் பரிவத்தனைகளுக்கான

கட்டமைப்பு வசதிகளும், கட்டமைப்பின் செயல் திறனும் அதிகரித்ததே இதற்குக் காரணம் என்று அரசு வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

***பேட்மிண்டன் (5)***

பேங்காக்கில் நடைபெறும், தாய்லாந்து மாஸ்டர்ஸ் பேட்மிண்டன் சாம்பியன் போட்டித் தொடரின் ஆடவர் ஒற்றையர் பிரிவில், இந்தியாவின் கிடாம்பி ஸ்ரீகாந்த், சங்கர் சுப்ரமணியன் ஆகியோர் காலிறுதி நிலைக்கு முன்னேறி உள்ளனர். காலிறுதிக்கு முந்தைய போட்டிகளில், இவர்கள் முறையே, ஹாங்காங் வீரரையும், இந்தோனேஷியா வீரரையும் தோற்கடித்தனர்.

***ஜெங்சங்கர் (11)***

வெளியுறவு அமைச்சர் டாக்டர் ஜெய்சங்கர் இன்று டெல்லி பல்கலைக் கழகத்தில், பல்வேறு கல்லூரிகளைச் சேர்ந்த மாணவர்களை சந்தித்து, விக்சித் பாரத் இயக்கம் குறித்து கலந்துரையாடினார். இளைஞர்களை சேர்த்துக் கொள்ளாமல், முன்னேறிய இந்தியா என்பது பற்றி யோசிக்கவே இயலாது என்று அவர் கூறினார். இளைய சமுதாயத்தின் கல்வி அறிவை மேம்படுத்தி, பல்வேறு துறைகளில் சிறந்த விளங்குவதற்கான படைப்பூக்க சுதந்திரத்தை இளைஞர்களுக்கு வழங்க வேண்டியதன் அவசியத்தை அவர் வலியுறுத்தினார். நாடு வளர்ச்சிப் பாதையில் பயணிக்கும் அதே வேளை, நாட்டில் இளைஞர்கள் மூலம் நிறைவேற்றி முடிக்க வேண்டிய பணிகள் இன்னும் ஏராளமாக இருப்பதால், இளைஞர்கள் பொறுப்புக்களை சுமையாக எண்ணாமல், தத்தம் துறைகளில் சிறக்க வேண்டும் என, அமைச்சர் மேலும் கேட்டுக் கொண்டார்.

***மீண்டும் தலைப்புச் செய்திகள்***

**மகாத்மா காந்தி நினைவு நாளான** இன்று, நாடு அன்னாருக்கு புகழஞ்சலி செலுத்துகிறது. இன்றைய தினம், **தியாகிகள் தின**மாகவும் கடைபிடிக்கப் படுகிறது.

நாடாளுமன்றத்தின் பட்ஜெட் கூட்டத்தொடர் நாளை தொடங்குவதை ஒட்டி, மத்திய அரசு இன்று புதுடெல்லியில், **அனைத்துக் கட்சிக் கூட்டம்** ஒன்றை நடத்தியது.

**பிரயாக்ராஜ் மஹா கும்பமேளா**வில் இருந்து பக்தர்கள் ஊர் திரும்ப ஏதுவாக, ரயில்வே துறை, நேற்று இரவு முழுவதும், 364 ரயில்களை இயக்கியது.

**வாகன நெரிசல்** அதிகமுள்ள புதுச்சேரி போன்ற இடங்களில், சாலைப் பாதுகாப்பு குறித்த விழிப்புணர்வு மிக அவசியம் என்று துணைநிலை ஆளுநர் திரு. கைலாஷ்நாதன் கூறியுள்ளார்.